# அன்னையின் வாழ்த்து

"படுக்கையிலிருந்து குழந்தை எழுகையில் விழித்துக் கொள்கின்றன விளையாட்டுக்கள்"

சிறுவர் அரங்கம் எட்டாவது இதழின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வீடுதோறும் முற்றங்களைத் தேடுகிறது நிலா! குழந்தைகளுக்கு பால் சோறு படைக்க! என்ற கவிதையைப் போல குழந்தைகளைத் தேடிக்கொண்டு இருக்கிறோம். கொரோனா என்ற அரக்கனின் பிடியில் இருந்து மீண்டுள்ள இவ்வேளையில் நீங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து செயல்படுவதைக் கண்டு என் மனம் மகிழ்கிறது. சிறுவர்களின் கல்வி, பாதுகாப்பு மற்றும் அவர்களது திறமைகளை வளர்ப்பதில் அக்கறையோடு பணிபுரியும் அருட்சகோதரிகளையும், ஆசிரியர்களையும் நினைத்துப் பெருமை கொள்கிறேன்.

தன்னையே உருக்கும் மெழுகைப் போல குழந்தைகள் நலனை மட்டுமே கண்முன் கொண்டு, இவ்விதழுக்காய் ஒவ்வொரு நாளும் தன்னை அர்ப்பணித்த ARUWYE இன் இயக்குனர் அருட்சகோதரி காணிக்கை ராஜ் ஷர்மிளா அவர்களையும் இவ்விதழ் வெளிவர உதவிய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

குதூகலத்துடன் கொண்டாடும் இக்குழந்தைகள் அறிவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும் வளர இறைவனிடம் ஜெபிக்கிறேன்.



Sr. Nirmala Lazar.

**அருட்சகோதிரி நிர்மலா லாசர்**

*சென்னை மாநிலத் தலைவி*

# அருட்சகோதரின் அறிமுகம்



குழந்தையின் மீது மனிதாபிமான உறவைக் கொள்ள வேண்டுமெனில் ஒவ்வொரு குழந்தையின் எல்லையற்ற உள்ளாற்றலை நம்ப வேண்டும். குழந்தைகளின் மனதை ஆழமாகப் புரிந்துகொள்ள உங்கள் அனைவரையும் சிறுவர் அரங்கம் எட்டாவது இதழின் மூலம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.


சிறுவர் அரங்கம் இதழானது சிறுவர்களின் மனதை ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும். சுய கல்விப் பாதையில் நடைபோட உதவுவதே இந்நூலின் நோக்கமாகும். குழந்தைகளின் படைப்பாற்றலை பிறருக்கு கொண்டுபோய் சேர்ப்பதை பெரும் கடமையாக எண்ணுகிறேன்.

இக்குழந்தைகளின் படைப்புக்கும், கல்விக்கும், செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்த எம் மாநிலத் தலைவி அருட்சகோதரி. நிர்மலா லாசர் அவர்களுக்கு என் நன்றிகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குழந்தைகளின் மேல் அக்கறை கொண்டு அவர்களை வடிவமைப்பதில் தங்கள் திட்டங்களையும் செயல்பாடுகளையும் முன்னெடுக்கும் அனைத்து அலுவலர்களையும், பொறுப்பாளர்களையும், அருட்சகோதரிகளையும், ஆசிரியர்களையும், என் அன்பு குழந்தைகளையும் வாழ்த்தி வணங்குகின்றேன். மேலும் பல வெற்றிகளைக் கடந்து அனைவருக்கும் பலன் தர எனது பாராட்டுக்கள்



**அருட்சகோதிரி**
**காணிக்கை ராஜ் ஷர்மிளா**
*ARUWYE* - இயக்குநர்

# பாலின சமத்துவதில் குழந்தைகளின் பங்கு



நாம் குழந்தைகளுக்கு என்ன கற்றுக் கொடுக்கின்றோம் என்பது மிகவும் முக்கியமானது. குழந்தைகளிடம் மழலை பருவத்தில் நாம் கற்றுக் கொடுப்பதுதான், மனதில் ஆழமாக பதியும். ஆனால் நம் பாடத்திட்டங்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது அல்லது குழந்தைகளுக்கு எவ்வாறு புகட்டப்படுகிறது என்பதை பார்த்தால் பெரும்பாலான நாடுகளில் அவர்களின் பாடத்திட்டங்களே, சிறுவர்கள் பலம் வாய்ந்தவர்கள். சிறுமிகள் அழகு மிகுந்தவர்கள் என்று குழந்தைகளிடையே வேறுப்பாட்டை சுட்டிக் காட்டுகின்றது. இது குழந்தைகள் மத்தியில் நேரடி பார்வையில் மறைந்து கிடக்கும் தலையாய பிரச்சனை.

பெரும்பாலும் ஆண்களும், பெண்களும் வழக்கமாக செய்கின்ற வேலைகள், ஓவ்வொரு பாலினத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட பணிகளாகவே தோன்றுகின்றது. பல சமூக ஆர்வலர்கள், ஒரு சுற்றுப் பாடப் புத்தகங்களை வாசித்து வந்தார்கள். அவற்றில் பெண்களைப் பற்றி முறையாக எழுதப்படவில்லை. நம் பாட புத்தகங்களில் பெண்கள் கீழ்ப்படியக் கூடிய கதாபாத்திரங்களாக அவர்கள் கூறுகின்றார்கள். 2000 - ஆம் ஆண்டிற்கு பிறகு குழந்தைகள் பள்ளிக்கு வரும் விழுக்காடு அதிகரித்துள்ளது. எனவே நாம் பாடப்புத்தகங்களில் மாற்றத்தை ஏற்படுத்தினாலே பாலின சமத்துவம் குழந்தைகள் மத்தியில் வளரும்.



நம்முடைய அரசாங்கமும் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதில் முன்வர வேண்டும். குழந்தைகளை சுற்றி அவர்கள் பயணிக்கும் வழித்தடங்கள், விளையாட்டு மைதானங்கள், பள்ளி வளாகங்கள், பூங்காக்கள் என்று அவர்கள் அன்றாடம் பார்க்கும் இடங்களில் பாலின சமத்துவம் பற்றியான சுவரொட்டிகள், வரைபடங்கள் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும். மாதத்திற்கு ஒருமுறையாவது பள்ளிகளில் பாலின சமத்துவம் பற்றியான காணொளிகளோ அல்லது தெருக் கூத்து மூலமாகவோ அல்லது பயிற்சிகள் மூலமாகவோ குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க பள்ளிகளுக்கு அறிவுறுத்தலாம். நம் அரசியலமைப்பு சட்டமே இதனை தெளிவாக கூறுகிறது. எனவே அரசாங்கம் நாடு தழுவி இதனை செயல்படுத்தினால் பாலின சமத்துவம் தொடர்பான பிரச்சனைக்கு தீர்வுகாண முடியும்.

20 - ம் நூற்றாண்டில் உலகம் பல மடங்கு முன்னேறிக் கொண்டு வருகின்ற இந்த சூழலில், பெண்கள் வீட்டு வேலை செய்பவர்கள் என்பதை கடந்து அவர்கள் அனைத்துத் துறைகளிலும் நுழைய தொடங்கிவிட்ட காலக்கட்டத்தில், அதே வேகத்தில் பாடப் புத்தகங்களில் பாலின பாகுபாட்டை குறைக்கின்ற பணியில் முன்னேற்றமில்லை. எனவே இந்த இடைவெளி பெரிதாகிக் கொண்டே இருக்கின்றது. எனவே நாடு தழுவி இந்த பிரச்சனைக்கு கவனம் அளித்து ஈடு செய்யலாம். ஆனால் முதலில் ஆசிரியர்களுக்கு இதனைப் பற்றி பயிற்சியளிப்பது அவசியம். சிறந்த கல்வி அளிக்க வேண்டுமென்றால், இந்தப் புத்தகங்களை திருத்தி மீண்டும் வடிவமைப்பது முக்கியம் மற்றும் அவசியமானதும் கூட. எனவே நாம் ஒன்றிணைந்து மாற்றத்தை ஏற்படுத்த முன்வருவோம்.

மாறுவோம் மாற்றம் காண்போம்!!!

**அன்மருதை**
**திருவண்ணாமலை**

# தலைமைத்துவ பண்பும் குழந்தைகளும்

குழந்தைகளை தலைமைத்துவ பண்பில் மேலோங்கி வளர்ப்பதில் அடித்தளம் அமைப்பது பெற்றோர்கள். குழந்தைகளுக்கு பாதுகாப்பு உணர்வையும் என்ன நடந்தாலும் நீங்கள் அவர்களுடன் இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கையும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மை கொண்டதாக உள்ளது. எனவே குழந்தைகளிடையே மதிப்பீடு செய்யாதீர்கள். அப்படி நீங்கள் மதிப்பீடு செய்யும் பொழுது குழந்தைகள் தங்கள் மேல் உள்ள நம்பிக்கையை இழக்கிறார்கள்.



பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை முதலில் நம் மனதில் இருந்து தூக்கி எரிய வேண்டும். நாம் எவ்வாறு குழந்தைகளுக்கு பாதுகாப்பு சூழலை உருவாக்குகின்றோமோ அதே போல் அவர்களுக்கு சுயமரியாதையை வழங்க வேண்டும். ஒரு குழந்தை தலைமைத்துவ பண்பில் வளர வேண்டுமென்றால் சுயேட்சையாக முடிவெடுக்கும் திறனும், சுதந்திரம் மிகவும் அவசியம். ஆனால் முடிவுகளை எப்படி எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள் அதே போல சுதந்திரத்தின் அளவையும் புகட்டுங்கள். அவர்கள் எடுக்கும் முடிவுகளிலோ அல்லது வேலைகளிலோ தோல்வி ஏற்ப்பட்டால் அவர்களை தட்டிக் கொடுங்கள். மேலும் அவர்கள் அதில் வெற்றிபெற ஊக்கப்படுத்துங்கள்.

குழந்தைகளுக்கு சமூகம் சார்ந்த அறிவை புகட்டுங்கள். ஏதாவது சமூகம் சார்ந்த பிரச்சனைகள் அவர்கள் கடக்க நேர்ந்தால் அதனை எவ்வாறு அணுகுவது மற்றும் தீர்வு காண்பது என்பதை பற்றி சொல்லிக் கொடுங்கள். குழந்தைகள் தனித்து செயல்படாமல் மற்ற குழந்தைகளுடன் இணைந்து செயல்பட சொல்லிக் கொடுங்கள். குழந்தைகளை பற்றி பேசும் போது அந்த கலந்துரையாடலில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகளுக்கு தங்கள் நண்பர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை பற்றி சொல்லிக் கொடுங்கள். இவர்களுக்கு உதாரணமாக நிறைய பிரச்சனைகளை கொடுத்து அதனை அவர்கள் அடைவதற்கு பக்கபலமாக இருங்கள். இந்த அனைத்து குணங்களும், திறமைகளும் தலைமைத்துவ பண்புகளை வளர்க்க உறுதுணையாக இருக்கும்.

ஒரு தலைவருக்கு தேவையான பண்புகளையும், திறமைகளையும் வளர்க்க உறுதுணையாக இருப்பதும், எல்லா நண்பர்களையும் தங்களுடன் தக்க வைத்து கொள்வதற்கு குழந்தைகளோடு இருப்பதும் பெற்றோரின் கடமையாகும். குழந்தையிலிருந்தே ஒவ்வொருவருக்கும் தலைமைத்துவ திறன் உருவாகத் தொடங்குகிறது. மேலாக அன்பிலும், பண்பிலும், அணுகுமுறையிலும் குழந்தைகளை வளர்ப்பதின் மூலம் நல்ல தலைவர்களை குழந்தையிலிருந்தே உருவாக்க முடியும். தலைவர்கள் வானத்தில் இருப்பதில்லை. நல்ல அணுகுமுறைகளும், பழக்கவழக்கங்களும் நல்ல தலைவர்களை குழந்தையிலிருந்தே உருவாக்க வேண்டும்.

**மைக்கில்புரம்**
**கள்ளக்குறிச்சி**

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்



ஒருங்கிணைந்த திட்டத்தின் நோக்கமே 0 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருமே உடல் நலத்திலும், ஊட்டச்சத்தையும் மேம்படுத்துவதே. இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் குழந்தைகள் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி இவை அனைத்தையும் சிறு வயதிலிருந்தே மேம்படுத்த முற்பட வேண்டும். அதே போல குழந்தைகள் இறப்பு விகிதத்தையும், நோய்வாய்ப்படுவதிலும், சத்துணவு பற்றாக்குறையையும் குறைக்க வேண்டும்.

தாய்மார்களிடையே இயல்பாகவே உள்ள குழந்தை பராமரிப்பு திறனைச் சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி மூலமாக கற்றுக் கொடுக்க வேண்டும். 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும் தாய்மார்களையும் அதாவது கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள், வளர் இளம் பெண்களின் நலத்தையும் ஊட்டச்சத்து விகிதத்தையும் மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும். 2017 - ஆம் ஆண்டு மாநிலம் தழுவிய அங்கன்வாடி மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கி எரிவாயு இணைப்பு, சமையல் மேடை மற்றும் சமையல் அடைப்பு ஆகியவை வழங்கப்பட்டது. அதனை சரியான முறையில் பயன்படுத்தி குழந்தைகளுக்கு சத்தாண உணவுகளை வழங்க வேண்டும்.

வருடந்தோறும் நெகிழ்வு தொகையாக ரூ. 1000 வழங்கப்படுகிறது. அதே போல குடற்புண் மருந்துகள் வருடம்தோறும் வழங்கப்படுகிறது. இதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். முன்பருவக் கல்வி பயில ஏதுவாக 11 மாதங்கள் உள்ளடக்கிய பாடத்திட்டம் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதனை சரியான முறையில் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். அவர்கள் கற்றுக் கொண்டவற்றை 2 - 3 வயது, 3 - 4 வயது மற்றும் 4 - 5 வயது குழந்தைகளுக்கு மதிப்பீடுகள் செய்து அவர்களின் கல்வி நிலையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.



குழந்தைகளை பெரும்பாலும் செய்முறை செய்வதில் ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் சிந்தனை திறன் வளரும். அதே சமயம் வேகமாக கற்றுக் கொள்வார்கள். மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவர்கள் மூலம் குழந்தைகளை முழுமையாக பரிசோதனை செய்ய வேண்டும். இந்த திட்டம் 1975 ஆண்டுகளில் தொடங்கப்பட்டு இன்று வரை தமிழகத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. என்ன தான் நிறை குறைகள் இருந்தாலும் அதனை பொருட்படுத்தாமல் அங்கன்வாடி ஊழியர்களுக்கு தொடர்ந்து பயிற்சிகள் அளித்து குழந்தைகள் உடலளவிலும், ஊட்டச்சத்து அளவிலும் சிறப்பாக வளர ஊக்குவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டினை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும். ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிப்பது அதன் மனிதவள மேம்பாடு தான். அந்த மனிதவள மேம்பாட்டில் அடித்தளமாகவும் ஆனித்தளமாகவும் இருப்பவர்கள் பெண்களும் குழந்தைகளும். எனவே இவர்களின் வாழ்க்கை மேம்பாடு ஒரு சிறப்பான திட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம். ஆக இதனை சரியான முறையில் பயன்படுத்தி பெண்களும் குழந்தைகளும் பயன்பெற வேண்டும்.

**காட்பாடி**
**வேலூர்**

# குழந்தை தற்கொலைகளும் தடுப்பு முறைகளும்



தற்கொலை என்பது ஒருவரின் சொந்த மரணத்தை தானே ஏற்படுத்திக் கொள்வது. இவை தற்போது குழந்தைகள் மத்தியில் அதிகம் ஏற்படுகிறது. எதனால் இந்த தற்கொலைகள் ஏற்படுகிறது என்று பார்த்தால் மனச்சோர்வு, மன உளைச்சல், ஆளுமை கோளாறு, மன கவலை, வன்கொடுமைகள், போதை பழக்கங்கள் என்று பல காரணிகள் இருக்கின்றன. தற்கொலைகளால் 2015 - ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இந்தியாவில் 2,12,000 குழந்தைகள் இறக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டது. இந்த தற்கொலைகள் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளிடமே அதிகம் காணப்படுகிறது. குறிப்பாக 15 - 18 வயது வரையுள்ளவர்கள் அதிகம் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

இறப்பதற்கு ஒரு வழியாக பயன்படுத்துவது தற்கொலை முறை. இவ்வாறு தற்கொலைகளில் ஈடுபடும் நபர்களின் எண்ணங்கள், நடத்தைகள், உணர்வுகள் மற்றும் கருத்துக்கள் அனைத்தும் அதனை தழுவியே காணப்படும். தற்கொலை என்பது கோழைத்தனமான ஒன்று என்று பலர் கூறுவார்கள். இருப்பினும் இது ஒரு பொருளின் உரிமை, தைரியமான செயல் மற்றும் ஒரு தனிமனித சுதந்திரமாகவே பண்டைய காலத்தில் கருதினார்கள். ஆனால் நாட்கள் செல்ல செல்ல சிறு பிரச்சனைகளைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாமல் குழந்தைகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

உலகத்தில் ஒவ்வொரு 40 நொடிகளுக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். பெரும்பாலான தற்கொலைகள் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளில் தான் ஏற்படுகிறது. அதுவும் குறிப்பாக 15 - 24 வயது உள்ளவர்களிடமே அதிகம் காணப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் உலகளாவிய அளவில் 8 லட்சத்திற்கு மேலானோர் தற்கொலை மூலம் இறக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.



வாழ்வதற்கு ஆக்கபூர்வமாக செயல்படுவதை விடுத்து இறப்பதற்கு பல யுத்திகளை கையாண்டு தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்கின்றார்கள்.

அப்படி என்றால் இதற்கு தீர்வு தான் என்ன? பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் முக்கியத்துவத்தைப் பற்றி அதிகம் பேச வேண்டும். தினமும் இரவில் அவர்களுடன் அமர்ந்து பேச வேண்டும். தினமும் இரவில் அவர்களுடன் அமர்ந்து அன்றைய நாள் பற்றி விவாதிக்க வேண்டும். அவர்களுக்கு என்ன பிரச்சனைகள் வந்தாலும் நீங்கள் அவர்களுடன் இருப்பேன் என்ற நம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். நல்ல நண்பர்களை உருவாக்க கற்றுத் தர வேண்டும். ஏதாவது பிரச்சனை என்றால் அதனை எவ்வாறு கையாளுவது என்று அவர்களுக்கு சொல்லித் தர வேண்டும். அவர்களுக்கு எப்போதாவது அவர்களுக்கு நம்பகமானவர்கள் உதவியோ அல்லது அறிவுரைகளோ தேவைப்பட்டால் தயங்காமல் முன்வர வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுங்கள்.

நாம் தேர்தெடுக்கக் கூடிய பாதைகள் எப்போதும் இனிமையானதாகவும், மென்மையானதாகவும் எப்போதும் அமைவது கிடையாது. கரடு முரடாக இருந்தாலும் அதனை கடக்க தயாராகிவிடுவதே இவ்வாழ்கைக்கான விழிப்புணர்வு. தற்கொலை என்பது ஒரு சரியான முடுவு இல்லை. குடும்பம், பள்ளி, விளையாட்டு மைதானங்கள் என்ற பல இடங்களில் நாம் எத்தனையோ பிரச்சனைகளை எதிர்க்கொள்ள நேரிடும். அதனை எதிர்க்கொண்டு கடந்து செல்வது தான் வாழ்க்கையின் அழகு.

**மோசவாடி**

**திருவண்ணாமலை**

# குழந்தைகளுக்கு உகந்த இந்தியா

அறிவிலும் ஆற்றலாலும் சிறந்த குழந்தைகளை பெற்றெடுத்து, வளர்த்து அவர்களை உருவாக்குவது ஒவ்வொரு பெற்றோரின் பேறு. இன்று இந்த அதி நவீன வாழ்க்கை முறையில் குழந்தைகளை வளர்ப்பது குறித்த வாய்ப்பு பெற்றோர்களிடம் குறைந்து காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் வேலைக்கு செல்லும் பெற்றோர்கள் அதிகரித்துள்ள சூழலில் குழந்தைகளிடம் உரையாடுவதே அலைபேசியில் தான். எனவே குழந்தை வளர்ப்பில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.



குழந்தைகளின் மனநிலைக்கும் சுத்தந்திரமாக செயல்படும் முதிர்ப்பருவத்திற்கும் இடைப்பட்ட இளம்பருவ நிலையில் குழந்தைகளை சரியாக வளர்க்க வேண்டும். இதில் பருவ வயதின் ஆரம்பத்தில் அதாவது 10 - 14 வயது குழந்தைகளை கையாளுவதில் பெற்றோர்கள் கடினப்படுகிறார்கள். அவர்கள் பெற்றோர்களின் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட செயலில் ஈடுபடும் பொழுது அவர்களின் மேல் கோபமடைந்து கண்டிப்பை அதிகப்படுத்துகின்றார்கள். ஒரு இளம் பருவ பெற்றோராக அவர்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியம். இந்த பருவத்தில் குழந்தைகளால் சரியான முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கின்றனர். இதனால் மன அழுத்தம், மனப்பதட்டம் அவர்களுக்குள் ஏற்ப்படுகின்றது. எனவே இவர்களை சரியான முறையில் கையாள வேண்டும்.



இவர்களை பற்றி பெற்றோர்கள் மூலமாகவோ, சக நண்பர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர்கள் மூலமாகவோ அவர்களின் நிலை பற்றி அறிய முடியும், அறிய வேண்டும். நாம் குழந்தைகள் தங்கள் வாழ்வை கைப்பற்ற கற்றுத் தரவேண்டும். தனிமை, சோர்வு, விரக்தி, படிப்பில் ஈடுபாடு இல்லாமை, எடை குறைதல், பொழுது போக்குகளில் விருப்பம் இல்லாமை, பசியின்மை, தூக்கமின்மை, தேவையற்ற அச்சம் போன்றவை குழந்தைகளின் ஆளுமை திறனை பாதிக்கும். எனவே இவை அனைத்திலிருந்தும் குழந்தைகளை பாதுகாக்க வேண்டும்.

இப்படி இருக்க குழந்தைகளுக்கு எவ்வாறான சமுதாயத்தை ஏற்படுத்தி தரவேண்டும். குழந்தைகளுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும், பிரச்சனைகளை தீர்க்கும் திறனை அதிகரிக்க வேண்டும் மற்றும் சமுதாயத்துடன் ஒன்றிப் போகும் சூழலை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளை ஒழுக்கத்துடன் வளர்க்க வேண்டும். தொழில்நுட்பம் பற்றிய அறிவை புகட்ட வேண்டும். ஆனால் அதற்கு அடிமையாகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுங்கள், பெற்றோர்களாகிய நீங்கள் குழந்தைகளுடன் நெருக்கத்தை உருவாக்குங்கள். குழந்தைகள் சுதந்திரமாக செயல்பட உதவுங்கள். அவர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணத்தை கைவிடுங்கள். அவர்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இங்கே யாரும் ஒரே மாதிரியானவர் இல்லை.

அவர்களின் சுய மதிப்பிற்கு மதிப்புக் கொடுங்கள். பெரியவர்களாகிய நாம் ஏதாவது தவறு செய்தால் அதனை நிருபிக்க நினைக்காமல் தவறு என்று ஏற்றுக்கொள்ளுங்கள். குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதோடு விட்டுவிடக் கூடாது. அவர்கள் எவ்வாறு படிக்கின்றார்கள். பள்ளியில் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பதை பற்றித் பள்ளிகளுக்கு சென்று அறிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் ஆசிரியர்களும் குழந்தையின் வளர்ச்சியில் அக்கறைக் காட்டுவார்கள்.

வீட்டு வேலைகளை இரு பாலருக்கும் சமமாக சொல்லித் தர வேண்டும். குழந்தைகள் செய்யும் செயல்களுக்கு பாராட்டுகள் வழங்க வேண்டும். அதுவே அவர்களை ஊக்குவிக்கும். எந்த சூழலும் பெற்றோர்கள் தங்களின் பாராட்டுகள் குழந்தைகளின் மேல் நிபந்தனையற்ற அன்பை காண்பிக்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் இதுவே அவர்களுக்கு உகந்த இந்தியாவாக இருக்கும் அவர்களின் சுய மதிப்பிற்கு மதிப்புக் கொடுங்கள். பெரியவர்களாகிய நாம் ஏதாவது தவறு செய்தால் அதனை நிருபிக்க நினைக்காமல் தவறு என்று ஏற்றுக்கொள்ளுங்கள். குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதோடு விட்டுவிடக் கூடாது. அவர்கள் எவ்வாறு படிக்கின்றார்கள். பள்ளியில் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பதை பற்றிப் பள்ளிகளுக்கு சென்று அறிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் ஆசிரியர்களும் குழந்தையின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவார்கள்.

**கோடம்பாக்கம்**
**சென்னை**

# குழந்தைகள் பாராளுமன்றம்

குழந்தைகள் பாராளுமன்றம் இன்று தமிழ்நாட்டில் குழந்தைகளிடையே பெரும்பாலான மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

**குழந்தைகள் பாராளுமன்றம் என்றால் என்ன?**

குழந்தைகளை வைத்து அமைத்து செயல்படும் குழந்தைகளின் அமைப்பே குழந்தைகள் பாராளுமன்றம்.

**நோக்கம்**

குழந்தைகளின் பங்கேற்பின் மூலம் அவர்களது தலைமைத்துவ பண்பை வளர்க்கவும், வாழ்க்கையை வடிவமைக்கவும் மற்றும் சமுதாயத்தில் ஈடுபாடு உள்ளவர்களாக மாற்றவும் குழந்தைகளை வழிநடத்துதல்.

**குழந்தைகள் பாராளுமன்றம் ஏன் தேவை?**

- குழந்தைகளிடையே தலைமைப் பண்பை வளர்க்க
- குழந்தைகளிடையே ஆளுமைப் பண்பை வளர்க்க
- குழந்தைகளின் பங்கேற்பை அதிகரிக்க
- சமூகப் பகுப்பாய்வு செய்ய கற்றுக்கொள்ள
- ஒற்றுமை, சமத்துவம், சமூக எண்ணம் வளர
- பொது நலனில் அக்கறை கொள்ள
- குழந்தைகள் உரிமைகளை, மனித உரிமைகளை தெரிந்துகொள்ள
- குழந்தைகளின் குரல் ஒன்றுபட ஓர் இயக்கமாக உருவாகிட

**குழந்தைகள் பாராளுமன்றத்தின் நன்மைகள்**

- பாராளுமன்றத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உதவுகிறது
- அமைச்சர்களின் பணிகளை தெரிந்து கொள்ள உதவுகிறது



- குழு ஒற்றுமையுடன் செயல்பட
- தெளிவான முடிவுகள் எடுக்கப் பயன்படுகிறது
- இலக்கை நிர்ணயிக்கிறது
- சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டுகிறது
- கல்வியின் அவசியத்தை தெளிவுப் படுத்துகிறது
- குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத நிலையை உருவாக்குகிறது
- கருத்துக்களை கூறவும் வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது
- தகவல்களை தெரிந்து கொள்ள உதவுகிறது
- அரசாங்க அதிகாரிகளுடன் அணுகும் முறையை கற்றுத் தருகின்றது

**குழந்தைகள் உரிமைகளை உறுதிப்படுத்த**

- சாதி, இனம், மத பேதமின்றி சமத்துவ சமூகம் மலர வழி வகுக்கும்
- அனைத்து விதமான போதைப் பொருட்களை மறுக்கும் மனப்பான்மையை ஏற்படுத்துதல்
- குழந்தைகள் தங்களது தனித்தன்மையை வெளிப்படுத்தவும் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் தளம் அமைத்து கொடுத்தல்
- மக்களாட்சி குறித்த சிந்தனையை வழங்கி அதை கிராம அளவிலும் மாநில தேசிய அளவிலும் செயல்படுத்தும் அமைப்பு முறைகளை அறிய உற்சாகப்படுத்துதல்
- சமூக செயல்பாடுகளில் குழந்தைகளின் பங்கேற்பை அதிகரித்து அவர்களின் தலைமைப் பண்புகளை வளர்த்தல்

**கஸ்பாபேட்டை**
**ஈரோடு**

# ஏன் குழந்தைகளுக்கு பாதுகாப்பு தேவை?

மனிதர்களின் அடிப்படை தேவைகளான உணவு, குடிநீர் இவைகளுக்கு அடுத்து ஒரு மிகப்பெரிய தேவை பாதுகாப்பு. இதில் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் குழந்தைகள். பெரியவர்களாகிய ஒவ்வொருவருக்கும் குழந்தைகளை பாதுகாக்கும் கடமை உள்ளது. ஏனென்றால் குழந்தைகளால் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு இல்லை. எனவே தான் பெற்றோர்கள் குழந்தைகளின் பாதுகாப்பாக இருப்பது அவசியம். குழந்தைகள் எப்போதும் தனித்துவம் மிக்கவர்கள். எனவே தான் ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையில் கூட குழந்தைகளின் பாதுகாப்பு பற்றி எழுதப்பட்டிருக்கிறது.



குறிப்பாக சமூக நலம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நீதி இவை அனைத்தும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஒன்று. பாலியல் கொடுமை மனதை உலுக்கக்கூடிய, அருவருப்பான, வெறுப்புமூட்டுகின்ற, நினைத்துப் பார்க்கக்கூட முடியாத குற்றமாகும். ஆனால் சமீபத்தில் சில வருடங்கள் இவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. குழந்தைகளின் மேல் பாலியல் குற்றம் ஏற்படாமல் அவர்களை காக்க வேண்டும். இது பெண் குழந்தை அல்லது ஆண் குழந்தை என்று பாகுபாடு இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளின் பிற்கால வாழ்வு என்பது மிகச் சிக்கலானதாக அமையும். ஆகவே இந்த வகை குற்றங்களை தடுப்பதற்கும் குழந்தைகளை பாதுகாக்கும் செயல்பாடுகளில் கடமையாளர் முற்பட வேண்டும்.

கல்வி என்பது மிகவும் அவசியமான ஒன்று. ஆனால் இந்த கொரோனா காலத்தில் குழந்தைகள் கற்றலின் மேலுள்ள ஆர்வம் குறைந்துக் காணப்படுகின்றது. இன்றைய மாணவர்கள் நவீன தொழிநுட்பங்களில் அதிக நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். தொழில்நுட்ப அறிவு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை கொண்டுள்ளதால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. ஆனால் அதிலும் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அதிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும். இவற்றில் பெற்றோர்கள் மட்டுமல்லாது அரசாங்கமும் இதில் தனது கவனத்தை திருப்ப வேண்டும்.

பாதுகாப்பு என்பது பிரச்சனைக்கு பின் சுத்தனமாக இருப்பது புத்திசாலித்தனம் அல்ல. வரும் முன் காப்பதே நல்லது. குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த பாதுகாப்பு குழந்தைகளுக்கு அவசியம். குழந்தைகளை சிறந்த முறையில் பாதுகாக்க அதற்கான சங்கங்கள் அமைத்து அதன் மூலம் தொடர்ந்து குழந்தை பாதுகாப்பை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பிரச்சனை என்று வந்து விட்டால், அதனை இந்த சங்கத்தின் அல்லது குழுவின் மூலம் கையாள வேண்டும்.

**ஜவ்வாதிமலை**
**வேலூர்**

# கட்டுரைகள்

## கல்வி

**முன்னுரை**

“கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என்பது ஆன்றோர் வாக்கு. வாழ்க்கையில் எவ்வாறான வறுமை நிலை வந்தால் கூட கல்வி கற்பதை நிறுத்தி விடக் கூடாது. கல்வியை எங்களுடைய வாழ்க்கையை மாற்ற வல்லது எமது அறியாமை இருளை பகுத்தறிவை விதைப்பது கல்வியாகும்.

**கல்வி கற்கும் இடம்**

பள்ளிக்கூடம், பள்ளி அல்லது பாடசாலை என்பது அடிப்படைக் கல்வி கற்கும் இடம் எனப் பொருள்படும். பொதுவாக தொடக்க நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான நிறுவனங்களே பாடசாலைகள் எனப்படுகின்றன.

**கல்வி கட்டளைச் சட்டம்**

1939 - ஆம் ஆண்டின் 31 - ஆம் இலக்க கல்வி கட்டளைச் சட்டமும் மாற்று மதப் பாடசாலையிலுள்ள எமது மாணவர்களும் இலங்கையில் கல்வி தொடர்பாக அமலில் உள்ள சட்டம் இதுவாகும். இச்சட்டம் இலங்கைப் பாடசாலைகளில் மத விஷயங்கள் பற்றியும், சமய படங்களைப் பாடசாலைகளில் போதிப்பது பற்றியும் தெளிவாக கூறுகிறது.

**பெண்கல்வி**

பெண்கல்வி பற்றிய தொடர் விழிப்புணர்வுப் பிரச்சாரமானது இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதல்ல. அதனை நீதிநெறி விளக்கம் என்னும் நூல் “கல்வியை கற்புடைய பெண்டிற்கு” என்றும் நான்மணிக்கடிகை எனும் நூலும் “மனைக்கு விளக்கம் மடவார்” என்று பெண்கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

**கல்வி பற்றிய சிந்தனைகள்**

கல்வியின் வளர்ச்சியும் சமூகத்தில் அதன் தாக்கமும் அதாவது மனிதன் ஒரு கவிஞனாகவோ, தத்துவ மேதையாகவோ, ஒரு நல்ல ஆசிரியராகவோ, ஒரு திறமை வாய்ந்த மனிதனாகவோ வளரக் கல்வி மிகவும் அவசியம். எனவே, ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகிய சிந்தனைகள் வளர கல்வி அவசியம்.

**முடிவுரை**

இந்த உலகையே மாற்றக்கூடிய ஒரு பலமான ஆயுதம் உண்டு அதுதான் கல்வி என்கின்றார் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த தலைவர் “நெல்சன் மண்டேலா”. எம்மையும் இந்த உலகத்தையும் மாற்றி நல்வழியில் இட்டு செல்ல கூடிய பெரும் சிறப்பு கல்விக்கு இருக்கிறது. படிப்பால் மட்டுமே பாரதத்தை பாராள செய்யலாம் என்ற “டாக்டர் அப்துல்கலாமின்” வார்த்தைகளை போல நாமும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கற்று மேன்மை அடைந்து கொள்ள வேண்டும்.

**யு. வரலட்சுமி**
**7 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

# சுற்றுச்சூழல்

**முன்னுரை**

நம்மை சுற்றியுள்ள சுற்றுப்புறம் நாள்தோறும் மோசமடைந்து வருகின்றது. நிலம், நீர், காற்று என அனைத்துப் பகுதிகளும் மாசடைந்து வருகின்றன. சுற்றுச்சூழலை மாசுப்படுத்துவதில் மனித நடவடிக்கைகளே பெரும் பங்கு வகுக்கின்றன.

**காற்று மாசு**

காற்று மாசுபடுதல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. வாகனங்களும், தொழிற்சாலைகளும் விடும் நச்சுப் புகைகள் வாயுமண்டலத்தில் கலந்து அமில மழைகளை உண்டாக்குகின்றன. இது உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது. மேலும் ஓசோன் படலமும் தேய்ந்து கொண்டிருக்கிறது. இதனால் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

**நீர் மாசு**

நீர் நிலைகளில் துணி துவைத்தல், கால்நடைகளை குளிப்பாட்டுதல், தொழிற்சாலைக் கழிவுகளை கலக்குதல் போன்ற செயல்களால் நீரானது மாசடைகின்றது. இதனால் மனிதர்களுக்கு பல்வேறு வகையான நோய்கள் வருகின்றன.

**நிலம் மாசு**

இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியின் விளைவால் நில மாசு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. நாகரீக முறையில் ஒருமுறை பயன்படுத்தி வீசப்படும் பாலித்தீன் பாக்கெட்டுகளையும் பிளாஸ்டிக் பாட்டில்களையும் அதிக அளவில் பயன்படுத்த தொடங்கி விட்டனர். எப்போதும் மக்காத இப்பொருள்களால் நிலமானது மாசடைகின்றது.

**ஒலி மாசு**

பெருநகரங்களில் ஒலி மாசு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மனிதனுடைய காதுகள் 120 டெசிபல் அளவு வரையே ஒலியைத் தாங்கும். ஒலிபெருக்கி, மோட்டார் வாகனங்கள், விமானம் போன்றவற்றில் இருந்து வரும் சத்தங்கள் ஒலியை மாசுபடுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. இதனால் மனிதர்களின் கேட்கும் திறன் பாதிப்படைகிறது.

**தொழிற்சாலைகளின் கழிவு**

தொழிற்சாலைகள் நகரத்தில் மட்டுமின்றி கிராமங்களிலும் பெருகி வருகின்றன. தொழிற்சாலைகள் திட, திரவ, வாயு கழிவுகளை பெருமளவில் வெளியேற்றுகின்றன. இதனால் சுற்றுப்புறம் பெருமளவில் பாதிப்படைகின்றது. தொழிற்சாலைக் கழிவுகளால் மனிதனுக்கு புற்றுநோய், நரம்பு மண்டலம் பாதிப்பு, உடல் உறுப்பு பாதிப்படைதல் போன்ற பல்வேறு இன்னல்கள் வருகின்றன.

**மாணவர்களின் பங்கு**

மாணவர்கள் முதலில் தங்கள் வாழ்விடமான வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தாங்கள் கல்வி கற்று வரும் கல்வி நிறுவனங்களை தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். தெரு மக்களிடமும் ஊர் மக்களிடமும் சுற்றுப்புறத் தூய்மையை வலியுறுத்தல் வேண்டும். ஊர்ப்புறங்களில் வைத்துள்ள குப்பைத் தொட்டிகளில் குப்பைகளைக் கொட்டுமாறு மக்களை அறிவுறுத்த வேண்டும்.

**முடிவுரை**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. எனவே நம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டு நம் உடலை, வீட்டை, தெருவை, நாட்டை, சுற்றுப்புறசூழலைத் தூய்மையாகப் பாதுகாப்போம். நம் உயிரும் உள்ளமும் நலமுடன் திகழப் பாடுபடுவோம்.

**வா. லாவண்யா**
**7 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

# தாய்மையின் பெருமை

**முன்னுரை**

தாயிற் சிறந்த கோயில் இல்லை என்று ஔவையார் தாய்மையினை போற்றினார். தாய் என்பவள் இந்த பூவுலகில் இல்லையென்றால் மனிதன் என்னும் பிறப்பே இருந்திருக்காது என்றால் மிகையாகாது. இறைவனையும் தாயையும் எப்போதும் உவமைப்படுத்தும் சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தாயினுடைய அன்பினால் தான் இந்த உலகமே இயங்கி கொண்டிருக்கின்றது. இக்கட்டுரையில் தாய்மையின் பெருமைகள் பற்றி நோக்கலாம்.

**தாய்மையின் தியாகம்**

தாய் என்ற சொல்லின் பொருளாக அளவு கடந்த அன்பு மற்றும் எண்ணிலடங்காத தியாகம் என்று சொல்ல முடியும். ஒரு தாயானவள் ஒரு குழந்தையினை பெற்றெடுத்து அதனை பாராட்டி சீராட்டி பாதுகாத்து வளர்ப்பதற்காக தன்னையே அர்பணிக்கின்றார்கள். தன் உத்திரத்தையே பலமாக தந்து குழந்தைகளை வளர்க்கின்றார்கள். வாழ்வின் பல வலிகளை தாங்கி கொண்டு தனது குழந்தைகள் நலனுக்காக உழைக்கின்ற உயர்ந்த தியாக செயலாக இதனை கூற முடியும்.

**குழந்தையின் வளர்ச்சியில் தாயின் பங்கு**

தாய் இன்றி ஒரு குழந்தை வளர்வது என்பது அத்தனை இலகுவானதல்ல. குழந்தையினை அன்போடு அரவணைத்து அதன் பசியை போக்க உணவளித்து அதன் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்து அதனை ஒரு சிறந்த மனிதனாக இந்த சமூகத்தில் வளர்த்தெடுப்பது ஒரு தாயின் முக்கிய பணியாக உள்ளது. ஒரு மனிதன் சமூகத்தில் சிறந்த நிலைக்கு வருவது அவனது தாயின் வளர்ப்பு என்றே கூறலாம்.

**தாயின் பேரன்பு**

உலகத்தில் எத்தனையோ உறவுகள் பல இருந்தாலும் யாராலும் தாய்க்கு நிகராகி விடமுடியாது. ஏன் என்றால் தன் பிள்ளைகள் மீது எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி பேரன்பினை ஒருவரால் தரமுடியும் என்றால் அது நம்மை பெற்ற தாயினால் தான். தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும் தன் குழந்தைகளுக்காக விட்டுக்கொடுக்கும் உன்னதமான உறவே தாய் என்று கூறலாம்.

**தாயின் பெருமைகள்**

எம்மை பெற்று வளர்த்து ஆளாக்கிய எமது தாயின் பெருமைகள் எண்ணில் அடங்காதவை மற்றும் ஈடு இணையற்றவை. வணக்கத்துக்கும் மரியாதைக்கும் உரிய அவர்களை பொறுப்புடன் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த உலகில் மிக உயரமானது தாயின் பாசம் என்றால் அது மிகையாகாது.

**முடிவுரை**

நாள் முழுவதும் ஒரு பம்பரம் போலவும் ஓய்வே இல்லாமல் மொத்த குடும்பத்திற்காக ஒரு தாய் ஓடி கொண்டிருப்பார். தாயின் அன்பு முழுமையாக கிடைக்க பெற்ற குழந்தைகள் பெரும் வரம் பெற்றவர்கள். இன்றைய காலகட்டத்தில் சிலர் தம் தாயின் பெருமைகளை அறியாத அவர்கள் மனம் நோக நடந்து கொள்வதனை காண முடியும். இவ்வாறு ஒருபொழுதும் நடந்து விடக்கூடாது. இளமையில் எங்களை வளர்த்த அன்னைக்கு நன்றி கடனாக அவர்களை இறுதி வரை பாதுகாப்பது ஓவ்வொரு குழந்தைகளின் கடமையாகும்.

**மு. சரண்யா**
**9 - ஆம் வகுப்பு**
**சென்னை**

# விவசாயம்

**முன்னுரை**

**“சுழன்றும் ஏர் பின்னது உலகு ஆதலால்
உழன்றும் உழவே தலை”**

என்கிறார் வள்ளுவர். அதாவது இந்த உலகம் உழவுத் தொழிலாலேயே செயல்பட்டு கொண்டிருக்கிறது. உழவு தொழில் இல்லாமல் போனால் பசி பட்டினி பஞ்சம் என்பன அதிகரித்து மக்கள் உணவில்லாமல் திண்டாடும் நிலை உருவாகும். பழங்காலங்களில் ஆதி மனிதன் வேட்டையாடி உணவருந்தினர். பின்பு ஆற்றங்கரையோரங்களை அண்டி சில பயிர்களை உருவாக்கி அவற்றின் மூலம் தனது உணவினை பெற்றுக் கொண்டனர். இவ்வாறு பயிர் செய்கையுடன் கால்நடை வளர்ப்பும் சேர்ந்த அம்சமே விவசாயம் என்றழைக்கப்பட்டது. இந்த உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் எல்லோருக்கும் உணவளிக்கும் மென்மையான தொழிலாக விவசாயம் கருதப்படுகிறது. சரி இந்த கட்டுரையில் விவசாயத்தின் முக்கியத்துவம். பண்டைய இயற்கை விவசாய முறைகளும் தீமைகளும் போன்ற விடயங்கள் நோக்கப்படுகின்றன.

**விவசாயத்தின் முக்கியத்துவம்**

மனிதனாக பிறந்த நமக்கு பசி என்ற உணர்வு இருக்கின்ற வரையில் விவசாயம் அழியாது. இந்த உலகம் பிறக்கின்ற ஒவ்வொவருக்கும் அவர்கள் இறக்கும் வரை உணவு தேவை ஆகவே விவசாயம் செய்வதனால் தான் நம் ஒவ்வொவருக்கும் உணவு கிடைக்கும். நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி இடம் பெற வேண்டியது அவசியமாகும். இன்றைக்கு உலகமெங்கிலும் உள்ள வறுமையான பகுதிகளில் உள்ள மக்கள் ஒருவேளை உணவுக்கு கூட வழியின்றி பசியால் இறக்கின்றார்கள் என்பது உங்கள் யாருக்காவது தெரியுமா? ஆகவே அத்தியாவசியமான விவசாயத்தை கைவிடும் பட்சத்தில் எல்லோருக்கும் இதே நிலை தான் ஏற்படும்.

இதனால் தான் உலக நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதற்காக பயிர்ச்செய்கை, பால்பண்ணை, கைத்தொழில், மீன்பிடி ஆகிய விஷயங்களில் அதிகம் கவனம் செலுத்துகின்றன. விவசாயத்தை விரிவுபடுத்தும் நோக்கில் விவசாயத்தில் அதிக தொழில்நுட்பங்களை புகுத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க முனைந்து நிற்கின்றனர். கடுமையான காலநிலை தன்மைகள், பொருளாதார நெருக்கடி மற்றும் யுத்தம் போன்ற நிலைமைகளில் உலகம் உணவு மற்றும் விவசாயத்தினுடைய முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ளும்.

**இயற்கைமுறை விவசாயம்**

இயற்கைமுறை விவசாயம் எனப்படுவது எந்தவித பக்கவிளைவுகளும் இல்லாத மண்ணின் விவசாய முறையாகும். பண்டைய கால தொடக்கம் நமது முன்னோர்கள் இயற்கை முறை விவசாயத்தையே மேற்க்கொண்டனர். இது இயற்கையை சிறப்பாக பாதுகாப்பதோடு உற்பத்தி செய்யும் உணவு பொருட்கள் மனிதனையும் பாதிக்காத தூய உணவு பொருட்களாக இருந்தன. இங்கு விவசாயம் நிலம் பராமரிப்பதற்காக எருதுகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றினால் பண்படுத்தப்பட்ட நிலத்தில் கால்நடைகளின் கழிவுகள் மற்றும் தாவர கழிவுகள் மண்ணை வளப்படுத்தி பாதுகாத்தன. இந்த இயற்கை பசளைகள் மண்ணை வளப்படுத்தியதோடு பாதுகாத்தன. பயிர்ச்செய்கையில் எஞ்சிய கழிவுகள் விலங்குகளுக்கு உணவாகின. இது ஒரு சுழற்சியாக இடம்பெற்றது.

இப்பயிர்ச் செய்கையில் சேதன பசளைகள் பக்கவிளைவுகளற்ற இயற்கை முறையிலான கிருமி நாசினிகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் விளைந்த விளைச்சல் பக்கவிளைவுகளற்றதாக காணப்பட்டது. அக்கால மக்கள் நோய் நொடிகளில்லாமல் நீண்டகாலம் வாழ்ந்தார்கள். இம்முறை விவசாயம் இன்றைக்கு மாற்றம் அடைந்து வருகிறது. ஒரு சிலர் தான் இன்னும் பாரம்பரியத்தை பின் பற்றிடாமையின் விளைவுகளை நாம் இன்றைக்கு அனுபவித்து கொண்டிருக்கின்றோம்.

**இன்றைய விவசாய முறை**

இன்றைய விவசாய முறைகள் அதிக லாபம் பெரும் வழியைக்காட்டுகின்றன. தொழில்நுட்பம் மூலமாக அதிக பரப்பளவில் பயிர் செய்ய முடிகிறது. புதிதாக உருவாகும் நோய்கள், களைகள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த முடிகிறது. ஆனால் மனிதர்களுக்கு உயிரியல் ரீதியாக கடத்தப்படும் நோய்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

**இன்றைய விவசாய முறைகளும் தீமைகளும்**

இன்றைய உணவு முறை நஞ்சாகி விட்டது. இன்றைய விவசாயத்தில் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் அசேதன பசளைகள் மனித உடலில் சேர்ந்து ஏராளமான நோய்களுக்கு காரணமாக அமைகிறது. புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்கள் உருவாகின்றன. நிறுவ கழிவுகள் நீர் நிலைகளில் கலப்பதினால் நீர் நிலைகள் நஞ்சாகின்றன. அளவுக்கு மீறிய மண் பண்படுத்தலாம். மண்கட்டமைப்பு சிதைந்து மண்ணரிப்பு போன்ற அபாயநிலை இன்றைய விவசாய முறையில் காணப்படுகின்றன.

**முடிவுரை**

“அடி காட்டிற்கு நடு மாட்டுக்கு நுனி வீட்டுக்கு” என்ற இயற்கை விவசாய விஞ்ஞானி நம்மாழ்வாரின் கருத்திற்கிணங்க நடைமுறைக்கு சாத்தியமாக இயற்கையான விவசாய முறைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இன்றைக்கு மனிதகுலம் தள்ளப்பட்டுவிட்டது. இன்றைக்கு இளம் வயதிலேயே பலர் தமது வாழ்வை இழக்கிறார்கள். எமது விவசாய முறையும் உணவு பழக்கவழக்கமும் மாறிவிட்டதனால் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன. நாம் இனியாவது எமது மூதாதையர்கள் சொன்ன விஷயங்களை புரிந்து கொண்டு நஞ்சில்லாத இயற்கை விவசாய முறைகளை மேற்கொண்டு எமது சந்ததிக்கு வழிகாட்ட வேண்டும். இது நம் ஒவ்வொருவருடைய தலையாயக் கடமையாகும்.

**யு. ரொனால்ட்**
**8 - ஆம் வகுப்பு**
**கள்ளக்குறிச்சி**

# கட்டுரை

## மகாத்மா காந்தி

**முன்னுரை**

சுதந்திர இந்தியாவின் “தேசபிதா” என வர்ணிக்கப்படும் மகாத்மா காந்தி உலகின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவராவார் பிரதானியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய தேசத்தை சுதந்திரமடைய செய்ததில் இவரின் பங்கு அன்பரியதாகும்.

**பிறப்பு**

காந்தியின் முழுப்பெயர் மோகன் தாஸ் கரம்சந் காந்தி ஆகும். இவர் 1869 - ஆம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் இவர் பிறந்தார். இவரின் தாய் மொழி குஜராத்தி மொழி ஆகும். இவர் தனது 13 - ஆவது வயதில் கஸ்தூரி பாய் என்பவரை திருமணம் செய்து கொண்டார். சிறு வயதில் காந்தி பார்த்த அரிச்சந்திரா நாடகம் அவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**கல்வி**

படிப்பில் சுமாரான மாணவராக இருந்தாலும் நேர்மையான மாணவனாக விளங்கினார். தனது 18 - வது வயதில் பாரிஸ்டர் எனப்படும் வழக்கறிஞர் கல்விக்காக இங்கிலாந்து சென்றார். வழக்கறிஞர் கல்வியை முடித்து இந்தியா திரும்பி சிறிது காலம் வழக்கறிஞராக மும்பையில் பணியாற்றினார். குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நீதிமன்றத்திற்கு வருபவர்களின் விண்ணப்பப் படிவங்களை நிரப்பும் பணியை செய்தார். 1893 - ஆம் ஆண்டில் ஒரு இந்திய நிறுவனத்தின் உதவியால் தென்னாப்பிரிக்காவில் பணி புரிய பயணமானார்.

**விடுதலை போராட்டம்**

இந்தியாவில் தனது சொந்த நாட்டு மக்கள் ஆங்கிலேயரிடம் அடிமைப்படுவதை கண்டு வேதனை அடைந்த காந்தி. ”இந்திய தேசிய காங்கிரஸ்” இல் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலை போராட்டத்தில் முழு வீச்சில் ஈடுபட்டார். 1924 - ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவரானார் காந்தி தலைமையேற்றவுடன் காங்கிரஸில் பல மாற்றங்களை ஏற்படுத்தி இயக்கத்திற்கு புத்துயிர் ஊட்டினார். அறப்போராட்டம் சுதேசி போன்ற கொள்கைகளை வலியுறுத்தி காங்கிரஸ் ஆக்கினார். இவர் முதலில் விவசாயிகளுக்கான “சம்பாரண்” போராட்டத்தை மேற்கொண்டார். பீகாரில் முதன்முதலில் சத்தியாக்கிரகம் என்னும் வழியை நிருவி வெற்றி கண்டார். அமைதி முறையில் வெற்றியும் பெற்றுத் தந்தார்.

**முடிவுரை**

இந்திய அரசியல் மட்டுமின்றி உலக மக்களுக்கும் முன்னுதாரணமான தலைவராக மகாத்மா காந்தி தன் வாழ்வில் சத்தியம் நேர்மை அகிம்சை ஆகிய கொள்கைகளை கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய மகான் ஆவார். இவர் குஜராத் மொழியில் எழுதிய தனது சுயசரிதை சத்திய சோதனை என தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பிரபல நூலாகும். காந்தியை பெருமைப்படுத்தும் வகையில் இந்தியாவில் பல இடங்களில் நினைவுச் சிலைகளும் அருகாட்சிகளும் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

**டா. அபிநயா**
**8 - ஆம் வகுப்பு**
**ஈரோடு**

# பாரதியார்

**முன்னுரை**

கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூக சீர்திருத்த சிந்தனையாளர், விடுதலை போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்து அனைத்தும் அளந்திட
வண்மொழி வாழியவே!

**சுப்ரமணிய பாரதியாரின் பிறப்பு**

சுப்ரமணிய பாரதியால் தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயாபுரத்தில் 11.09.1882 அன்று பிறந்தார். இவர்தம் பெற்றோர் சின்னசாமி - இலக்குமி ஆவர்.

**பாரதியாரின் நூல்கள்**

குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களை எழுதினார். நாடு, மொழி, இறை பெண்மை முதலிய பாடு பொருள்களில் எண்ணற்ற கவிதைகள் இயற்றினார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார். இந்தியா, விஜயா முதலிய இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமின்றி சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசன கவிதைகளையும் சீட்டுக் கவிதைகளையும் எழுதியவர்.

**பார்: சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்**

எத்தனை தீப்பட்டெரிவன? ஓகோ!
எத்தனை வடிவம் செழம்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமே
எறிந்திடுந் தங்கத் தீவுகள்! பாராடி!
நீலப் பொய்கைகள் அடடா நீல

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மலந்தது அனைத்தும் அளந்திட
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மனம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

**பாரதியார் தமிழ்மொழியை,**

- ☐ தமிழ்மொழி எக்காலத்திலும் நிலை பெற்று வாழ்க
- ☐ ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமானது தமிழ்மொழி
- ☐ ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ் கொண்ட தமிழ் மொழி

- ☐ எங்கள் தமிழ்மொழியாகிய தாய்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழும்
- ☐ எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீக்கும் மொழி
- ☐ தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைகிறது

**பாரதியும் சமூக விடுதலையும்**

பாரதி அரசியல் விடுதலையை மட்டுமல்லாமல் மொழி விடுதலை, ஆன்மீக விடுதலை, சமுதாய விடுதலை, பொருளாதார விடுதலை, பெண் விடுதலை ஆகிய அனைத்தும் விடுதலைகளுக்கும் குரல் கொடுத்து மூத்த பாவலன் ஆவார். நாட்டுப்பற்றோடு இறை பற்றையும் ஊட்டவே.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்று அரைகூவல் விடுத்த உணர்வாளர். மக்கள் அனைவரும் சாதி, மதம் இன்றி துணையாக வாழவேண்டுமென்று

"எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்"

என்று ஒருமைப்பாட்டு உணர்வை தன் பாட்டின் மூலம் எடுத்துரைத்தார் நாட்டுப்பற்றின் அவசியத்தை எடுத்துக் கூற.

**பாரதியாரின் சிறப்பு**

பாரதியார் பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மகாகவி என்றெல்லாம் புகழப்பெற்றார் சுதேசமித்திரன் இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார் இந்திய விடுதலைக்கு பாடுபட்டார்.

**ஸ்ரீ தேவி**
**9 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

# இயற்கை வளம் காப்போம்

பரந்து விரிந்த இப்புவி இயற்கை வளங்களால் சூழப்பட்டுள்ளது. இயற்கை, கடவுள் நமக்கு கொடுத்த மிக பெரிய பொக்கிஷம் ஆகும். நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என பஞ்சபூதங்களும் இயற்கை வளமாகும். மனிதன் இவ்வளத்தை சூழ்ந்தே படைக்கப்பட்டுள்ளான். அவற்றை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகும். இயற்கை நமக்கு செய்யும் நன்மைகள் பல உள்ளன. இயற்கை வளத்தை பற்றிய தகவல்களை கட்டுரை வடிவில் இந்த பதிவில் படித்தறியலாம் வாங்க.

**குறிப்பு சட்டம்**

- ☐ முன்னுரை
- ☐ இயற்கை வளங்களின் முக்கியத்துவம்
- ☐ இயற்கை மாசு
- ☐ சீற்றங்கள்
- ☐ முடிவுரை

**முன்னுரை**

இப்பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. நாம் உயிர் வாழ்வதற்கு தேவையான உணவிலிருந்து குடிக்கின்ற நீர் வரை மனிதனுடைய ஒவ்வொரு இடத்திலும் முக்கிய பங்கு வகுக்கிறது. காற்று, நீர், சூரிய ஒளி, மரம், கரி, மணல் என மக்களுக்கு பயன்படும் இயற்கை வளத்தின் பயன்கள் எண்ணிலடங்காதவை.

**இயற்கை வளங்களின் முக்கியத்துவம்**

இப்புவியில் இருக்கும் அழகிய நிலப்பரப்பு அதன் நான்கு திசைகளிலும் இருக்கும் சமுத்திரங்கள், பச்சை நிற போர்வை போல அமைத்திருக்கும் காடுகளும், பூத்துக் குலுங்கும் மலர்களையும், வெள்ளி நிறம் போன்ற நீர் வீழ்ச்சிகள், மான் போன்று துள்ளி குதித்து ஓடும் ஆறுகளையும் கொண்டுள்ளது.

**இயற்கை மாசு**

மக்கள் பயன்படுத்தும் வாகனப் புகை, தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகையால் காற்று மாசடைகிறது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தொழிற்சாலை கழிவுகள், வீட்டு கழிவுகள். மற்றும் ஆழ்த்துளை கிணறுகள் அமைப்பதால் நீர் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல் நிலத்தடி நீரின் அளவும் குறைந்து கொண்டே போகின்றது.

**சீற்றங்கள்**

இயற்கை இவ்வாறெல்லாம் மாசடைவதால் சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, பனிப்பொழிவு மற்றும் காட்டுத்தீ போன்ற இயற்கை சீற்றங்கள் உருவாக்குவதற்கு காரணமாக இருக்கிறது. ஜூலை மாதம் 28 - ஆம் தேதி உலக பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

**முடிவுரை**

அறிவியல் வளர்ச்சிக் காரணமாக இயற்கை அழிந்து கொண்டு வருகின்றது. அறிவியல் எவ்வளவு இந்த உலகிற்கு முக்கியமோ அதே அளவிற்கு இயற்கை வளங்களும் முக்கியம் என்பதை உணர்ந்து அனைவரும் செயல்படுவோம்.

**சி. பிர்திக்கா**
**12 - ஆம் வகுப்பு**
**வேலூர்**

# கவிதைகள்

## அப்பா

தான் பார்க்க
நினைத்ததை - விட
தன் பிள்ளை - இந்த
உலகத்தை அதிகம்
பார்க்க வேண்டும் - என்று
நினைக்கும் உள்ளம்...!

**சி. மாதவன்**
**9 - ஆம் வகுப்பு**
**வேலூர்**

## நண்பன்

நட்புக்கு வயது
அவசியமில்லை...
பிறப்பு இல்லையென்றாலும்
இறப்பு வரை தொடரும்...
விட்டுக் கொடுக்கும்
மகத்தான உறவு...

**சு. சந்தோஷ்**
**9 - வகுப்பு**
**ஈரோடு**

## கொரோனா

உன் பெயரோ கொரோனா
நீ பிறந்து வந்தது சீனா...
உன்னை அழிக்க நினைத்தது
உலக நாடுகள் ஒன்னா...
இதனால் ஊரடங்கு உத்தரவு
போட்டாங்க மெய்னா...
இப்படியே பேருந்து
ஓட்டமா நின்னா
வெளி ஊருக்கு போறவங்க
நிலைமை என்னா...!!!

**ஊ. ராபர்ட் கெல்வின்**
**10 - ஆம் வகுப்பு**
**கள்ளக்குறிச்சி**

## விவசாயி

மண்ணை பயன்படுத்தி
வனைபவன் குயவன்...
பொன்னை உருக்கி
புடமிடுபவன் பொற்கொல்லன் - ஆனால்
மனிதனுக்கு
உயிர் கொடுப்பவன்...
"விவசாயி"...!!!

**சு. பிரிய தர்ஷினி**
**9 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

## அன்பு

நேரம் கிடைக்கும் போது
பேசுவது அன்பு...
பேசுவதற்காக நேரம்
ஒதுக்குவது - தான்
உண்மையான அன்பு...
அன்பு அனைவருக்கும் கிடைக்கும்...
உண்மையான அன்பு
அதிஷ்டம் உள்ளவருக்கே
கிடைக்கும்...!!!

**சி. அருண்**
**8 - ஆம் வகுப்பு**
**சென்னை**

## வாழ்க்கை

வேர்கள்
வளரும் செடிக்கு
ஆதாரம்...
தன்னம்பிக்கை - உன்
வாழ்க்கையின் உயர்விற்கு
மூலாதாரம்...!!!

**வசந்த்**
**8 - ஆம் வகுப்பு**
**வேலூர்**

## குடும்பம்

வீடு
என்னும்
கூட்டுக்குள்...
அன்பென்னும்
சத்தத்தை - கீச்சிடும்
பாச பறவைகள்...!!!

**சு. ஆகாஷ்**
**9 - ஆம் வகுப்பு**
**கள்ளக்குறிச்சி**

## அம்மா அப்பா

என்னை
பத்து மாதம்
கருவறையில் சுமந்தவள்
என் தாய்...
என் தாயையும்
என்னையும் - சேர்த்து
தன் நெஞ்சில்
சுமந்தவர் - என்
“அப்பா”...!!!

**மொனிக்கா**
**9 - ஆம் வகுப்பு**
**ஈரோடு**

## சூரியன்

அவள் மதி
முகத்தில் உள்ள - வில்
இரு புருவத்திற்கு - நடுவே
இட்ட செந்நிற பொட்டு - போல
இயற்கை என்னும் வானில்
அந்திப் பொழுதில்
இட்ட செந்நிற ஞாயிறு
என்னை மயக்கம்
அடைய செய்தது ஏனோ???

**சி. டார்தி மேரி**
**9 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

## விவசாயி

சுட்டெரிக்கும் வெப்பத்தில்
தன்னை எரித்துக் கொள்பவன்...
தன்னை பேணாமல்
பயிரை பேணுபவன்...
தன்னை அழகுபடுத்தாமல்
இயற்கையை அழகாக்குபவன்...
புல் முளைத்த இடத்தில்
நெல் முளைக்க வைப்பவன்...
மழைக்காக தவமிருந்து
மனித பசியை போக்குபவன்...
வியர்வை சிந்தி
பிறரை வாழ்விப்பவன்...!!!

**நா. சாரதி**
**8 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

ARUWE

# விடுகதைகள்

1. கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார் ஆனாலும் நல்லவர் அவர் யார்?
2. கண்ணில்லாத என்னால் அழமுடியும், பார்க்க முடியாது நான் யார்?
3. எத்தனை முறை திறந்து மூடினாலும் ஓசை வராத கதவு?
4. பையைத் திறந்தால் பவள முத்துக்கள் - அது என்ன?

**மு. மகேந்திரன்**
**7 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாமலை**

5. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான் அவன் யார்?
6. அடித்தாலும் உதைத்தாலும் அழ மாட்டான் அவன் யார்?
7. யாரும் ஏறமுடியாத மரம், கிளைகள் இல்லாத மரம் அது என்ன?
8. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய் கடை அது என்ன?

**சந்தோஷ்**
**8 - ஆம் வகுப்பு**
**ஈரோடு**

9. மூன்று பெண்களுக்கு ஒரே முகம். முதல் பெண் ஆற்றிலே, நடுப் பெண் காட்டிலே, கடைசி பெண் வீட்டிலே அவர்கள் யார்?
10. கூட்டுக்குள்ளே கூடி இருக்கும் குருவியும் அல்ல, பாய்ந்து செல்லும் புலியும் அல்ல, எதிரியை கொல்லும் வீரனும் அல்ல அது என்ன?
11. வாள் இல்லாமல் கேடயம் மட்டும் எப்போதும் வைத்திருக்கும் போருக்கு போகாத வீரன் அவன் யார்?
12. பார்த்தால் கல், பள் பட்டாள் நீர் அது என்ன?

**ஆ. ஆனந்தி**
**8 - ஆம் வகுப்பு**
**வேலூர்**

13. வயிற்றில் விரல் சுமப்பவன், தலையில் கல் சுமப்பவன் அவன் யார்?
14. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
15. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
16. இரவல் கிடைக்காதது இரவில் கிடைப்பது அது என்ன?

**சி. அந்தோணி**
**10 -ஆம் வகுப்பு**
**கள்ளக்குறிச்சி**

17. கதிர் அடிக்காத களம் உயிர் பறிக்கும் களம் அது என்ன?
18. இதயம் போல் துடிக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?
19. உருவம் இல்லாதவன் சொன்னதைத் திரும்பச் சொல்லுபவன்?
20. காலைக்கடிக்கும் செருப்பில்லை காவல் காக்கும் நாயில்லை?


**வு. ஜனனி**
**9 - ஆம் வகுப்பு**
**திருவண்ணாலை**


## விடைகள்

1. தையல்காரர்
2. மேகம்
3. கண் இமை
4. மாதுளை
5. வெங்காயம்
6. பந்து
7. வாழை
8. தேன்கூடு
9. முதலை, உடும்பு, பல்லி
10. அம்பு
11. ஆமை
12. பனிக்கட்டி
13. மோதிரம்
14. வாழைப்பு
15. விரல்கள்
16. தூக்கம்
17. போர்க்களம்
18. கடிகாரம்
19. எதிரொலி
20. முள்

# ஏழு வித்தியாசம்

இந்த படத்தில் உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.






# வண்ணம் தீட்டுதல்

குழந்தைகளே இந்த படத்திற்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்.



# வழி கண்டு பிடித்தல்

இந்த வழியை சரியாக கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



# எண்களை இணைத்தல்

எண்களை இணைத்து என்னை உருவாக்குங்கள் பார்க்கலாம்.

